[27th April 1959

Houses for Harijans in Dindigul taluk

* 169 *Q.*—SRI M. A. B. ARUMUGHASAMY : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) the number of houses constructed for Harijans in each firka in Dindigul taluk during 1958;

(*b*) whether there is any proposal to construct houses for Harijans in Ayyampalayam in Athoor firka, Dindigul taluk; and

(*c*) if so, the details of the same?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Fifty houses in the Vadamadurai firka, 24 houses in Eriodu firka and 16 houses in Palayam firka are under construction.

(*b*) Yes, Sir.

(*c*) The question will be finalized when the housing scheme for 1959–60 is taken up.

SRI M. A. B. ARUMUGHASAMY : திண்டுக்கல் தாலுக்கா, ஆத்தூர் பிர்க்கா ஹரிஜனங்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படாததற்குக் காரணம் என்ன ?

THE HON. SRI P. KAKKAN : ஆத்தூர் பிர்க்காவுக்குத் தொகை ஒதுக்கப்படவில்லை. ஆகையால்தான், அய்யம்பாளையத்தில் வீடுகள் கட்டுவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இப்பொழுதுதான் அவார்டு கொடுப்பதற்கு முடிவு செய்திருக்கிறது. 1958–59-லே கட்டி முடிக்கப்படவில்லை. 1959–60-லே கட்டி முடிக்கப்படும்.

SRI N. R. THIAGARAJAN : பழனி தாலுகாவுக்கு நிதி அமைச்சர் அவர்கள் சென்று பார்த்து 'அங்கு கட்டப்பட்ட வீடுகள் படுமோசமாக இருக்கின்றன. பணம் கொடுக்க வேண்டாம், என்று சொல்லிவந்தார். மதுரை ஜில்லாவில் கட்டப்பட்ட வீடுகளை மராமத்து அமைச்சர் அவர்கள் சென்று பார்த்து, அவை மட்ட ரகமாகக் கட்டப்பட்டிருக்கின்றன அங்கே குடியேற முடியாது என்று சொன்னார்கள். ஆகவே, மட்ட ரகமாகவும், படுமோசமாகவும் வீடுகள் கட்டப்படாமல் நல்ல முறையிலே கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

THE HON SRI P. KAKKAN : கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்வது ஓரளவு உண்மைதான். நிதி அமைச்சர் அவர்கள் பழனி தாலுகாவில் போகும்போது ஒரு கிராமத்தில் கட்டப்பட்ட வீட்டைப் பார்த்தார்கள். அங்கே சிறிது குறைவு ஏற்பட்டிருக்கிறது. அம்மாதிரி நானும் மின்சார இலாகா அமைச்சரும் பெரியகுளம் தாலுக்காவில் சின்னமனூருக்குப் பக்கத்து ஊரில் கட்டப்பட்ட காலனியைப் பார்த்தோம். கண்ட்ராக்டர் நல்ல கண்ட்ராக்டர் என்று காண்ட்ராக்ட் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், அவர் ஒழுங்கீனமாக நடந்திருக்கிறார். சரியாகக் கட்டப்படாத அந்த வீடுகளை எல்லாம் அந்தக் கண்ட்ராக்டரே செப்பனிட்டுக் கொடுக்குமாறு தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மறுபடியும் புதுப்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

SRIMATHI A. S. PONNAMMAL : திண்டுக்கல் தாலுகாவில் அய்யம்பட்டி கிராமத்தில் இரண்டு மாதங்களுக்கு முன்பு தீப்பிடித்து 150 வீடுகள் எரிந்து போயிருக்கின்றன. அது பற்றி அமைச்சர் அவர்களுக்கும்

27th April 1959]

மகஜர்கள் வந்திருக்கின்றன. தீயினல் எரிந்துபோன ஹரிஜனங்களுடைய வீடுகளைப் புதிதாகக் கட்டுவது பற்றி அரசாங்கம் யோசனை செய்திருக்கிறதா ?

THE HON. SRI P. KAKKAN : நெருப்புப் பட்ட வீடுகளை எல்லாம் கட்டுவதற்கு வேறு நிதி இருக்கிறது. ரெவின்யூ இலாகா வீடு ஒன்றுக்கு முப்பது ரூபாய் வீதம் கொடுக்கிறார்கள். ஆயிரம் ரூபாய்க்கு மேல் போனால் ரெவின்யூ போர்டினிடமிருந்து கேட்டு வாங்க வேண்டும். இந்தத் திட்டத்தின் கீழ் இருபது, முப்பது வீடுகளுக்கு அதிகப்படாமல் கட்டுவதற்கு அரசாங்கம் திட்டம் இட்டிருக்கிறது. குடி இருப்பு மனைக்கட்டு என்று சொன்னால், எவ்வளவு வேண்டுமானாலும் அதற்காகக் கொடுப்பதற்கு அரசாங்கம் ஓரளவு ஏற்பாடுசெய்யும்.

MR. SPEAKER : இன்னும் இருபத்தெட்டு கேள்விகள் இருக்கின்றன. ஒவ்வொரு கேள்விக்கும் மூன்று உப கேள்விகள் கேட்டால் நேரம் அதிகமாக வேண்டி இருக்கும். ஆகவே, குறைவான உபகேள்விகள் கேட்க வேண்டும்.

SRI M. A. B. ARUMUGHASAMY : அய்யம்பாளையத்தில் கட்டப்படும் வீடுகளைப் பற்றி கனம் அமைச்சர் அவர்கள் தகவல் சொல்ல முடியுமா ?

THE HON. SRI P. KAKKAN : தகவல் என்னிடம் இல்லை. இருந்தாலும், அய்யம்பாளையத்தில் வீடுகள் கட்டுவதற்காக 3.46 ஏக்கர்கள் மனைக்கட்டு வாங்கப்பட்டு, நாற்பத்தெட்டு வீடுகள் கட்டிக்கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

Poultry Farms

* 170 Q.—SRI K. VINAYAKAM (on behalf of Sri M. P. Sarathi கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) இந்த ராஜ்யத்தில் உள்ள கோழிப்பண்ணைகள் எவ்வளவு ?

(ஆ) 1958-ம் வருடம் அந்தப் பண்ணைகளில் உற்பத்தியான முட்டைகளின் மதிப்பு என்ன ?

(இ) வடாற்காடு மாவட்டத்தில் எத்தனை பண்ணைகள் உள்ளன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Sixty-four Government poultry farms or units.

(*b*) The estimated value of eggs produced in Government farms and units was Rs. 29,810·66 nP.

(*c*) Two consisting of one poultry extension centre at Turinjapuram and one demonstration unit attached to the Veterinary Hospital, Tiruvannamalai.

SRI K. VINAYAKAM : நாட்டிலே இருக்கும் வறுமையைப்போக்கவும், அரசாங்கத்துக்கு இப்பொழுது பணம் பற்றுக் குறையாக இருக்கிற நிலைமையைப் போக்கவும், ஊரெல்லாம் கோழிப்பண்ணைகளைவைத்து முட்டைகளை உண்டாக்கி வியாபாரம் செய்யலாம் என்று ஒரு அரசியல் கட்சி சொல்லிக்கொண்டு வருகிறதே, அந்த யோசனையை அரசாங்கம் ஏதாவது ஆராய்ச்சி செய்தார்களா ?